# வடு

இதழ்-18 பெப்ரவரி-2012

சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த

## நெடும் பயணம் இது.



நாம் நீண்ட துரம் கொண்டாடும் தீப்பந்தம்

பரவி நின்றெரியும் சாதியத்தின் குரல் அறுத்த சிறுசொல்

தன் வாழ்நாளை வரலாறாக்கிய பெருமனிதன்

நாற்பத்தேழு வருடங்களுக்கு மேலாக பூத்த ஒரு 'மல்லிகை'யை வாடாமல் காக்கும் ஆச்சரியத்திற்குரிய ஒரு மனிதனை 'வடு' நினைவில் தாங்குகின்றது. விருதுகளும், பட்டங்களும் எட்டமுடியாத சிகரம் **டொமினிக் ஜீவா...**


சாதியை ஒழிக்கும் வழி என்ன? ப:4



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் தலைதுக்கிய சாதி வெறி. ப:11



மீளக் குடியேறி ஒருவருடம் ஆகியம் தேவைகள் பூர்த்திசெய்யப்படாத நிலை.ப:8



பிரான்சில் ஜனாதிபதித் தேர்தல்.ப:10



உரும்பிராய் சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா.ப:13






வெளியீடு : அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

# வடு வின் பார்வையில்...



'மேற்குலக நீதிக்கு' பதில்சொல்லும் ஓர் நெருக்கடிக்குள் இலங்கையை சிக்கவைப்பதற்கான முயற்சிகள் தீவிரம் பெற்றுவருகின்றது. ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கியநாடுகளின் மனித உரிமை ஸ்தாபனத்தின் 19வது அமர்வில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளும், கண்டனங்களும்,அதற்கான தண்டனையும் வழங்கப்படுவதற்கான முன்னெடுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவ்விடயத்தில் அமெரிக்காவின் விருப்பத்தோடு, பல்வேறு ஐரோப்பிய மேற்கு நாடுகள் இலங்கையை விசாரணைக்குட்படுத்தி தண்டனை வழங்க உத்தேசித்துள்ள முறைமைக்கும், இலங்கை மீதான மேற்குலகத்தின் விசாரணைக்கும், அவ்விசாரணையூடாக இலங்கை அரசிற்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதற்கு ஆதரவாக இலங்கையிலும்,புகலிடத்திலும் உள்ள தமிழ்த்தேசிய விரும்பிகளது அபிலாசைகளுக்கும் இடையில்; பாரிய வேறுபாடுகளை நாம் காணலாம்.

மேற்குலகத்தின் இன்றைய நிலை பல வகையிலும் சிக்கலுக்குள்ளாகியே வருகின்றது. சர்வதேச அரசியல், பொருளாதார, இராணுவ நிலைகளில் மிகவே-கமான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. தமது அதிகார மேலாதிக்கத்திற்காக பலம் கொண்ட அரசுகள் சிறிய நாடுகளை குறிப்பாக வளர்முக நாடுகளை தமக்கு சார்பாக அணிசேர்க்கும் வரலாற்று அனுபவத்தை நாம் அறிந்திருக்கின்றோம்.

இதுவரைகாலமாக சர்வதேச அதிகாரம் செலுத்திவந்த அமரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகள் பொருளாதார ரீதியாக படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. கடந்த வருட ஐரோப்பிய யூனியனைச்சேர்ந்த நாடுகளின் வரவு செலவில் ஏற்பட்ட பாற்றாக்குறையானது பலநூறு மில்லியன்களை தாண்டிவிட்டது. ஐரோப்பிய யூனியனில் இணைந்ததால் தான் நமக்கு இவ்வளவு நெருக்கடிகள் ஏற்பட்டது என கிறீஸ் தனது வேதனையைத் தெரிவித்துள்ளது. இவ்வாறு இதுவரை காலமும் சர்வதேச அதிகாரம் செலுத்திவந்த மேற்குலநாடுகளின் பரிதாப நிலை இருக்கும்போது மிகப்பாரிய அளவில் அனைத்துவகையிலும் சர்வதேச அதிகாரத்தை கைப்பற்றும் வகையில் BRICS எனும் கூட்டமைப்பு (பிரேசில், ரசியா, இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா) வளர்ச்சியடைந்து வருகின்றது. ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடிக்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக கடன் வழங்கும் அளவிற்கு அந்த கூட்டமைப்பு (BRICS) பலம் பெற்றுள்ளது. அத்தோடு கிழக்காசிய நாடுகளும் பொருளாதார ரீதியில் தன்னிறைவு கொண்டதாக பலம் பெற்று வருகின்றது.

இவ்வாறான புதிய அதிகாரசக்திகளுடன் இன்றைய இலங்கை அரசுகொண்டுள்ள நெருக்கம் காரணமாகவே சர்வதேச மனித உரிமை குறித்த விசாரணக்கு உட்படுத்த காரண-மாக அமைந்தது. இன்றைய அரசாங்கமானது மேற்குலகின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நடந்திருக்குமேயாயின், குறிப்பாக யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் எந்த விசாரணையும் நடக்க சாத்தியம் இருந்திருக்காது. அதுமட்டுமல்லாது தமது அணியாகவும் தமக்கு உகந்த காரியங்களுக்கு இடையூறும் இல்லாதிருந்தால் (எவ்வளவுதான் மனித அழிவுகள் நிகழ்திருந்தாலும்) விசாரணையும் இல்லை, நீதியும் இல்லை.

இவ்வாறான ஒரு மேற்குலக மேலாதிக்க, நயவஞ்சக விசாரணையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அதற்காக இலங்கை அரசு ஆதரவு வழங்கும் அதிகார சக்தி (BRICS) ஒன்றும் புனிதமானதல்ல.

வறிய பலமற்ற நாடுகள் 'பேய்' களோடுதான் உறவாடவேண்டியுள்ளது! ஆகவே இந்த இரண்டு பேய்களுக்கு மத்தியில் எந்த 'பேய்' உடன் நாம் உறவை பேணுவதென்பதே எம்முன்னால் உள்ள தேர்வாக உள்ளது.

இலங்கை மீதான சர்வதேசத்தின் நிலைப்பாடு இவ்வாறு இருக்க எமது தமிழ்த்தேசியப் பற்றாளர்களின் நோக்கம் என்பது வெறும் பழிவாங்கும் நோக்கம் மட்டுமே. அதற்காகவே இவர்கள் இந்த மேற்குலக சர்வதேச நீதி மான்களிடம் நீதி கேட்கின்றார்கள். இவர்களது பழிவாங்கும் உணர்வு-களை நாம் பலவகையில் அனுபவித்தவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள், மாற்று இயக்கத்தவர்கள், இந்திய உளவாளிகள் என பழிவாங்கி குருதி பருகிய தாகம் இவர்களுக்கு. அவ்வாறான பழிவாங்கும் நோக்கத்துடன்தான் தமது மேற்குலக எஜமானர்களுக்கு ஆதரவாக சாட்சியம் சொல்ல ஜெனிவாவை சுற்றிவளைத்து நிற்கின்றார்கள்.
இவர்களது இன்றைய தமிழ்த் தேசிய பிரதிநிதியான திரு சம்பந்தன் அவர்களிடம் அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தால் தான் நீங்கள் ஜெனிவாவிற்கு செல்லவில்லை என்று கூறப்படுகின்றதே எனக் கேட்டபோது: "இவ்வாறான ஒரு சிலரது குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க முடியாது. ஜெனிவா மாநாட்டிற்கு நாங்கள் கடைப்பிடிக்கும் வழி-முறைகளை ஊடகங்களில் அம்பலப்படுத்தமுடியாது. ஆனால் வெளிநாடுகளில் உள்ள எமது நேசநாடுகளுடன் உரையாடி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவு பெற்று அதன் பின்னரே ஜெனிவா செல்லாதிருக்க முடிவு செய்தோம். நாங்கள் அங்கு செல்லவில்லையே தவிர எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம்." (வீரகேசரி 28-2-2012)

திரு சம்பந்தன் அவர்களிடமிருந்து துள்ளிக் குதித்துவரும் மேற்குலக விசுவாசத்தை பார்த்தீங்களா!

## "ஜனநாயகம்"

அண்மையில் எண்ணை விலையேற்றத்திற்கு எதிரான கடற்றொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் நிகழ்ந்த துப்பாக்கிப்பிரயோகமும், அதன் விளைவால் நிகழ்ந்த கொலையும் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது. வெள்ளை வான் கடத்தல்கள் குறிப்பாக அரசிற்கு எதிராக செயல்படுபவர்கள் கடத்தப்படுவதென்பது தொடர்ந்த வண்ணமாகவே இருக்கின்றது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது இலங்கையில் ஜனநாயகம் நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வதெப்படி? இவைகளுக்கும் அப்பால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆளுமை தொடர்ந்து நிலைபெற்று வரும் நாடு எவ்வாறு ஒரு ஜனநாயக நாடாக இருக்கமுடியும்?

எனவே இதுபோன்ற சம்பவங்களை அகற்ற முனைவதோடு, மாகாணங்களுக்குரிய சுய ஆட்சி அதிகாரங்களுக்கான உரிமைகளையும் வழங்க முன்வரவேண்டும். அதனூடாகவே ஒரு மக்கள் அரசு என்பதற்கான தகுதியை பெறமுடியும்.

2012 மே மாதம் 5-6 திகதிகளில் கனடாவில் 39வது இலக்கியச் சந்திப்பு நடைபெற உள்ளது.

### வடு வாசகர்களுக்கு ....

"வடு" பத்திரிகைக்கான கதை,கவிதை, கட்டுரை மற்றும் தகவல்கள் போன்ற ஆக்கங்களைய்,விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகட்கு:-
இலங்கை:-

'VADU'
N.THAMIL ALAGAN
'MALAR VASA'
NORTH, URUMPIRAI
URUMPIRAI

Vadusrilanka@gmail.com

புலம் பெயர் நாடுகளுக்கு:

'VADU'
F.D.S.D.S
70, SQUARE DES SAUVES
95140 GARGES LES GONESSE
FRANCE

VADU.WORLD@hotmail.fr



# சாதியை ஒழிக்கும் வழி என்ன?



லாகூரிலுள்ள இந்துச் சீர்திருத்த அமைப்பொன்று தமது மாநாட்டிற்கு அம்பேத்கர் அவர்களை தலைமை தாங்கும்படி அழைத்தது. அவர் அங்குஆற்ற இருக்கும் உரையை முன்பே அனுப்பும்படியும் கேட்டுக் கொண்டது. அவ்வாறு அம்பேத்கர் அனுப்பிய உரையில் உள்ளடங்கிய விடயத்தில் உடன்பாடு இல்லாததால் (இந்துமதம் குறித்த அம்பேத்கரின் கடும் விமர்சனம்) தாம் ஏற்பாடு செய்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என அம்பேத்கரிடம் தெரிவிக்கப்பட்டது.

1936 ஆம் ஆண்டு லாகூர் “ஜாத்பட்தோடக் மண்டல்’ என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாநாட்டிற்காக டாக்டர் அம்பேத்கர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆனால், பேசப்படாத உரை...

> ’உண்மையை உண்மையாகவும் உண்மையல்லாதவற்றை உண்மை அல்லாதவையாகவும் தெரிந்துகொள்’
>
> – புத்தர் –

## மூன்றாம் பதிப்பின்முன்னுரை

இந்த உரையின் இரண்டாம் பதிப்பு, 1937 இல் வெளியிடப்பட்டது. அது, மிகக் குறுகிய காலத்தில் தீர்ந்து போனது. புது பதிப்பு வெளியிட வேண்டிய தேவை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. 1917 ஆண்டு மே மாதத்தில், இந்திய அரும்பொருள் ஆய்வேட்டில் வெளியான என்னுடைய ‘இந்தியாவில் சாதிகள் : அவற்றின் அமைப்பியக்கம், தோற்றுவாய், வளர்ச்சி’ என்ற கட்டுரையையும் இதனுடன் இணைத்து – அதற்கேற்ப இந்த உரையை மாற்றி அமைக்க எண்ணி இருந்தேன். ஆனால், அதற்குரிய நேரமும் கிட்டவில்லை செய்து முடிக்கும் நிலையிலும் நான் இல்லை. இந்நூலை உடனடியாக வெளியிடக் கோரி, பொது மக்களின் கோரிக்கை அதிகரித்து வந்தது. எனவே, இந்தப் பதிப்பு, இரண்டாம் பதிப்பின் மறுபதிப்பாகவே வெளிவருகிறது.

இந்த உரையின் செய்தி, இவ்வளவு துரத்துக்குப் பரவியதில் மகிழ்ச்சி அடைகிறேன். எந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இந்த உரை வெளியிடப்பட்டதோ, அந்த நோக்கத்துக்கு இது உதவும் என்று நம்புகிறேன்.

22, பிருதிவிராஜ் சாலை பி. ஆர். அம்பேத்கர்
புது டெல்லி
1.12.1944

சாதியை ஒழிக்கும்வழி என்ன?

நண்பர்களே!

இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கும்படி மிகுந்த அன்போடு என்னைக் கேட்டுக் கொண்ட 'ஜாத் பட்தோடக் மண்டலின்' உறுப்பினர்களுக்காக, உண்மையிலேயே மிகவும் வருந்துகிறேன். என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது குறித்து அவர்களிடம் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படும் என்று எனக்கு உறுதியாகத் தெரியும். லாகூரில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்கு பம்பாயில் இருந்து ஒரு மனிதனை இறக்குமதி செய்தது ஏன் என்ற கேள்விக்கு, 'மண்டல்' ஆளாக வேண்டி இருக்கும். இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்க என்னைவிடத் தகுதி வாய்ந்த எவரேனும் ஒருவரை, மண்டலால் மிக எளி-தாகக் கண்டுபிடித்திருக்க முடியும் என நான் நம்புகிறேன்.

"நான் இந்துக்களை விமர்சித்து இருக்கிறேன். இந்துக்களால் வணங்கப்படுகிற 'மகாத்மா'வின் மேலாதிக்கத்தை நான் மறுத்திருக்கிறேன். இந்துக்கள் என்னை வெறுக்கிறார்கள் அவர்களுடைய தோட்டத்தில் உள்ள நச்சுப் பாம்பாக என்னைப் பார்க்கிறார்கள்."

அப்படி இருக்க, கவுரவம்மிக்க இந்தப் பொறுப்பை ஏற்கும்படி என்னை அழைத்தது ஏன் என்று, அரசியல் அறிவுள்ள இந்துக்கள் கேட்கப் போகும் கேள்விக்கு, மண்டல்காரர்கள் விளக்கம் தந்தாக வேண்டி வரும்.

என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது மிகவும் துணிச்சலான ஒரு செயலே. இது, தங்களை அவமதித்தது போலாகும் என்று சில அரசியல் இந்துக்கள் நினைத்தால் கூட வியப்பில்லை. வெறும் மத அபிமானம் மட்டுமே உள்ள சாதாரண இந்துக்களுக்கும்கூட, இது உறுத்தலாகவே இருக்கும். தலைவன் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சாஸ்திர விதிகளை மீறியது ஏன் என்பதற்கான விளக்கத்தையும் மண்டல் அளிக்க வேண்டி இருக்கும்.

சாஸ்திரங்களின்படி, மற்ற மூன்று வர்ணங்களுக்கும் பார்ப்பனரே 'குரு' என்ற நிலையில் அமர்த்தப்பட்டுள்ளார். "வர்ணானாம் ப்ராஹ்மனோ குரு" என்பது சாஸ்திர விதி. எனவே, ஓர் இந்து யாரிடம் கல்வி கற்க வேண்டும், யாரிடம் கல்வி கற்கக் கூடாது என்பதை மண்டலும் அறிந்தே உள்ளது.

"ஓர் இந்துவானவன், அவர் அதிக அறிவுடைய-வர் என்பதற்காக மட்டும் ஒருவரை தலைவராக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சாஸ்திரங்கள் விதித்துள்ளன."

இது, மகாராட்டிரத்தைச் சேர்ந்த துறவி ராமதாசர் என்பவரால் மிகத் தெளிவாக்கப்படுகிறது. அவர் சிவாஜியை இந்து ராஜ்யம் அமைக்குமாறு தூண்டியவர் என்று கூறப்படுகிறது. தன் 'தச போதனை' யில் (மராத்தி மொழியில் உள்ள சமூக, அரசியல் மதக் கட்டளைகள் இவை) இந்துக்களை நோக்கி ராமதாசர், 'அந்த்யாஜா' (தீண்டத்தகாதவர்) ஒருவேளை கல்வி அறிவு பெற்றிருக்கிறார் என்பதற்காக மட்டுமே அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற கேள்வியை கேட்கிறார். அவ்வாறு ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று விடையும் அளித்துள்ளார். இதுபோன்ற கேள்விகளுக்கெல்லாம் என்னவிதமாக பதில்கொடுப்பது என்ற பிரச்சனையை மண்டலுக்கே விட்டுவிடுகிறேன். தலைமைப் பொறுப்புக்கு உரிய ஒரு-வரைத் தேடி பம்பாய்வரை வந்ததற்கும், இந்துக்களுக்கு அறவே பிடிக்காத ஒரு மனிதனை அப்பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்ததற்கும் — 'அந்த்யாஜா' (தீண்டத்தகாதவர்) ஒருவரை தேர்ந்தெடுத்து, அவரைப் பிற 'சவர்ணர்'கள் (சாதி இந்துக்கள்) அடங்கிய கூட்டத்தினரிடையே பேச அனுமதிக்கும் 'இழி செயலை' செய்யத் தூண்டியதற்கும் — என்ன காரணமோ, மண்டல்காரர்களுக்கே வெளிச்சம். என்னைப் பொறுத்தவரை, உங்களுடைய அழைப்பை என் சொந்த விருப்பத்தை மீறியே ஏற்றுக் கொண்டுள்ளேன்.

என்னைச் சார்ந்த என் சமூக தீண்டத்தகாதவர்களின் விருப்பத்துக்கு எதிராகத் தான் — உங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்பதை முதற்கண் தெளிவாக்கிட விரும்புகிறேன்.

"இந்துக்கள் என்னை வெறுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அவர்களுக்கு விருப்பமான மனிதனாக இல்லை என்பதையும் அறிவேன். இதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் அவர்களிடம் இருந்து விலகி இருக்கிறேன்."

அவர்களை வேதனைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. என்னுடைய இடத்தில் இருந்த படியே என் எண்ணங்களை நான் வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறேன். அந்த செயலே போதுமான அளவுக்கு, அவர்களுக்கு ஆத்திரத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதைத் தவிர, இந்துக்களுடைய மேடையிலேயே ஏறி அவர்களுடைய செவிக்கு எட்டும் தொலை-லவில் நான் செய்து கொண்டிருந்ததை, நேருக்கு நேர-ாக செய்யும் குறிப்பான விருப்பமெல்லாம் எனக்கு இல்லை. நான் தலைமை ஏற்றிருப்பது, நீங்கள் என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததினால் தானே தவிர, என் விருப்பத்தினால் அல்ல. நீங்கள் சமூக சீர்திருத்தத்தை குறிக்கோளாகக் கொண்டவர்கள். உங்களுடைய குறிக்கோள் எப்போதும் எனக்கு ஏற்புடையதே. அந்தக் குறிக்கோளுக்கு உதவுகிற ஒரு வாய்ப்பு கிட்டுகிறபோது, அதுவும் குறிப்பாக அந்தக் குறிக்கோளுக்கு நான் உதவக் கூடும் என்று நீங்கள் எண்ணுகிறபோது, அந்த வாய்ப்பை மறுக்கக் கூடாது என்று நான் எண்ணினேன். நான் இன்றைக்குக் கூற இருப்பது, நீங்கள் தீர்வு காண முயற்சி செய்யும் பிரச்சனையைத் தீர்க்க — எந்த வழியி லாவது உதவக்கூடுமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பிரச்சனையைப் பற்றி என் பார்வை என்ன என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தொடரும். (நன்றி:ambedkarcollection.com)

நீண்ட காலமாக சொந்த நிலம் இல்லாத காரணத்தால் கோண்டாவில் பகுதியிலுள்ள புகையிரதப் பாதையிலும் புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்திலும் குடியிருந்து வந்த மக்கள் உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு றெயில்வே திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில் அங்கு வசித்த ஏழு குடும்பத்தினர் சொந்தக் காணி இருந்தால் தங்களுக்கும் வீட்டுத் திட்டம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பெருந்தொகைப் பணத்தைக் கடன்பட்டு அப்பகுதியில் 10 பரப்புக் காணியை கொள்வனவு செய்து பகிர்ந்து கொண்டு கிராமசேவையாளரிடம் முறைப்படி வீடொன்றைக் கட்டுவதற்காக விண்ணப்பம் செய்துள்ளனர்.

வசதி படைத்த பலருக்கும் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்ட போதும் ஏதிலிகளான தங்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைக்காமையினால் ஏமாந்த மக்கள் கிராமசேவையாளரிடம் இது பற்றிக் கேட்ட போது குறித்த நிலம் விவசாயத்துக்குப் பயன்பட்ட நிலம் என்று விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளதனால் உங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்க முடியாதென்று தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசும் இந்தியா உட்பட உலக நாடுகளும் கூட இங்குள்ள வீடற்ற மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்த போதும் இங்குள்ள சில அதிகாரிகள் அதற்கு இடையூறாக இருந்து வருகின்றனர். இது சாதி ரீதியாக தாங்கள் ஒடுக்கப்பட்டு வருவதன் தொடர்ச்சியான விளைவாகவே தாம் கருதுவதாக கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட அம்மக்கள் இதுவிடயமாக கோப்பாய் பிரதேச செயலரிடம் சென்று முறையிட்டனர்.

குறித்த நிலம் விவசாயச் செய்கைக்கு அவசியமானதென கருதும் பட்சத்தில் குறித்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு தாங்கள் குடியிருப்பதற்கு ஏற்ற நிலமொன்றை பெற்றுத் தருமாறு அவர்கள் விண்ணப்பித்துள்ளதாக அறிய முடிகின்றது.
குறிப்பிட்ட நிலப்பகுதியில் பல வீடுகள் புதிதாக கட்டப்பட்டிருக்கின்றது. தற்போதும் வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் எங்களுக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம்? எதிர்காலத்தில் வடக்கு கிழக்கின்அரசியல் நில அதிகாரங்கள் மேட்டுக்குடி அதிகாரிகளின் கையில் கிடைத்தால் இங்கிருக்கும் அரச நிலங்களிலும், மயான பூமிகளிலும் கூட நாம் குடியிருக்க முடியாத நிலை ஏற்படலாம் என அவர்கள் அங்கலாய்கிறார்கள். ●

# கோண்டாவில் புகையிரதப் பாதையில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுத்திட்டம் மறுப்பு

## உதைக்க வரும் வாமனுக்கு

**கள்ள அடி எடுத்து வரும்**

**திருவடிகள்.**

**கபட வார்த்தைகள் புழுங்கி விழும்**

**திருவாயில்.**

**உயிர்கள் நிரம்பித் தளும்பும்**

**திருவோடு திருக்கரங்களில்.**

**கண் குருடாகக் கடாட்சிக்கும்**

**தர்ப்பைத் திருமடியில்.**

**பிரசன்னமாகும்**

**உலகளந்த பெருமாள்**

**இம்முறையொரு மயிரளந்து**

**முடிக்கட்டும் முதலில்.**

-மதிவண்ணன்-

# தற்போது கனடாவில் வசித்துவரும்

# என்.கே.ரகுநாதன்

**அவர்களடன் உரையாடிய கற்சுறாவின் அனுபவங்கள்**

'வடு' -17 இன் தொடர்ச்சி...



### கற்சுறா:
நீங்கள் பங்குபற்றிய போராட்டங்கள் குறித்த சம்பவங்களைக் குறிப்பிடுவிர்களா?

### ரகுநாதன்:
என்னைப் பொதுவாகப் பத்திரிகைத் துறையுடன் ஒதுக்கிவிட்டுவிடுவார்கள். அந்தப்பக்கம் கொஞ்சம் அவதானம் தேவை. அதனால் என்னை அதற்கு நியமித்துவிடுவார்கள். ஆனால் நானும் போராட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றேன்.ஆனால் முன்னணியில் நின்று போராடினேன் என்று சொல்லமுடியாது. உண்மையில் போராடியவர்கள் டானியல், எஸ்ரி என் நாகரட்ணம், தங்கவடிவேல் போன்ற பலர். இப்ப எனக்குப் பல பெயர்கள் மறந்து போய்விட்டது. பலர் கட்சியுடன் இணைந்தும் போராடினார்கள்.

### கற்சுறா:
இந்தவகைப் போராட்டங்கள் அத்தனையையும் தமிழ்த்தேசியம் வந்து இல்லாமல் புறந்தள்ளிவிட்டதும். பின்னர் தமிழ்த் தேசிய விடுதலை என்பது சாதிப் பாகுபாட்டை இல்லாமல் செய்து விட்டதும் என்ற கருத்துப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

### ரகுநாதன்:
என்னுடைய அவதானிப்பின்படி முன்பிருந்த அதாவது பழையகாலச் சாதிக் கொடுமை. அந்தத் தடிப்பு இப்போது இல்லை. அதற்கு ஒரு காரணம் காலமாற்றம். அது முக்கியம். அதை மறக்கக் கூடாது. அதைவிட அண்மையில் நண்பர் ஒருவர் எழுதியிருந்தார் சாதிகள் துப்பாக்கி நிழலில் மறைந்து கிடக்கின்றன என்று. விளங்குதா உங்களுக்கு? அதாவது இந்தப் போராட்டத்திற்குள் துப்பாக்கி முனையில் சாதி மறைந்து கிடக்கிறது. உண்மையில் இந்த இடதுசாரிகளின் போராட்டத்தையும் அதனோடு ஒட்டிய காலமாற்றத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. நான் படிக்கேக்க கடைசிவாங்குதான். நான் படித்த பள்ளிக்கூடம் நான் படிக்கத் தொடங்கமுதல் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்தான் ஆரம்பிக்கப்பட்டது. சைவப்பள்ளிக்கூடம். சிவப்பிரகாசா வித்தியாசாலை என்று அதற்குப் பெயர். அந்தப்பிளிக் கூடத்தித்திற்கு ஒருபக்கம் மிஷனறி ஸ்கூல் மற்றப்பக்கம் கத்தலிக் ஸ்கூல். அந்தநேரம் கல்வியை மேம்படுத்தியது மிஷனறிஸ் ஸ்கூல்தானே. நான் 5ம் வகுப்பு வரையும் படித்ததே எனது வீட்டிற்குப் பக்கத்திலிருந்த கத்தலிக் பாடசாலையில். அதன்பின் தும்பளையிலிருந்த சைவப்பள்ளிக்கூடத்தில் படித்தேன். தும்பளை அது சாதித் திமிர் பிடித்தவர்கள் வாழும் ஊர். அந்தப் பள்ளிக்கூடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு அங்கு பல இடங்களில் இருந்து மாணவர்களைச் சேர்த்தெடுக்க வேண்டியிருந்தது.

அப்ப அவர்களுக்கு சாதி பார்க்க முடியாமல் இருந்தது. அந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்கப்பட்ட முதல் தாழ்த்தப்பட்ட மாணவன் நான். என்னுடன் எனது மைத்துனன் தம்பிராசா எனபவரையும் கொண்டுவந்து சேர்த்தார்கள். பின் அவரை தகப்பன் கள்ளுக் கொட்டிலில் வேலை இருக்கு என்று கூட்டிக் கொண்டு போய்விட்டார். நான் தனியத்தான் எஸ்.எஸ்.சி வரையும் அங்கு படித்தேன் வேறு எந்த ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனும் வரவில்லை.

### தர்சனா:
அங்கு நீங்கள் அவமானத்திற்குள்ளாக்கினீர்களா? அவமானப்படுத்தினார்களா?

### ரகுநாதன்:
என்னுடன் படித்தவன் ஒருவன். அவனுடைய பெயர் சந்திரமோகனதாஸ்காந்தி. காந்தி 1950களில் இலங்கை வந்தபோது யாழ்ப்பாணத்தில் வல்லிபுரக் கோயிலுக்கு வந்தார். அவனுடைய தகப்பன் அவரைத் தரிசித்து விட்டு வந்தகாலங்களில் பிறந்தவன். அதனால் அவனுக்கு அந்தப்பெயர் இடப்பட்டது. அவனால் தான் நான் பெரிய கஸ்டங்களை அனுபவித்தேன். படு ஆயோக்கியத் தனங்களையெல்லாம் செய்யத் தொடங்கிவிட்டான். என்ன செய்வது பெயரை அப்படி வைத்து விட்டு அயோக்கினாக இருக்கிறாங்கள். அவன் இப்ப எங்க இருக்கிறானோ தெரியாது.

(தொடரும்)

# மீளக்குடியேறி ஒரு வருடம் ஆகியும் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலை

யுத்தம் விரட்டியதால் தமது சொந்த இடங்களைவிட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறி யிருந்தனர். நீண்ட காலமாக நீடித்த யுத்தம் முடிவுற்ற நிலையில் தமது சொந்த இடங்களில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு அங்கு வந்துள்ள மக்களுக்கு ஒரு வருடம் ஆகியும் அவர்களது அடிப்படைத் தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

தெல்லிப்பளை வட்டாரத்திலுள்ள கீரிமலை பிரதேசத்தை அண்டிய நகுலேஸ்வரம் எனும் ஊரில் மீளக் குடியேறிய மக்களது அத்தியாவசிய தேவைகள் இதுவரை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது. இங்கு மொத்தமாக 60 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள்.

"பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீள் எழுச்சித்திட்டம்" செயற்பாட்டின் கீழ் இவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்ற போதும் மக்களின் அடிப்படைத் தேவையான வீடு, மலசலகூடம், குடிநீர் போன்ற அத்தியாவசியத் தேவைகளோடு, கல்வி, கைத்தொழில் அபிவிருத்தி என்பனவும் இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே உள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் அரைநிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட போதும் அது முழுமையாக வழங்கப்படவில்லை. 5ற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் உடைய குடும்பங்களுக்கும், பெண்களின் தலைமைகளிலுள்ள குடும்பங் களுக்குமே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீடு வழங்கப்படவேண்டிய தேவை இருந்தபோதும் இப்பாகுபாட்டால் மிக அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களின் வசதிகளுக்கேற்ப சிறிய கொட்டில்களிலும், தரப்பாள்களின் கீழும் வாழ்கின்றார்கள். தற்பொழுது வன்னியிலிருந்து வந்தவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ரூபா.50000 தான் இதற்குக் காரணம். தங்களின் உயிரைத் தவிர அனைத்து உடைமைகளையும் இழந்து வெறுங்கையுடன் வந்த மக்கள் இவர்கள். வெறும் ஐம்பதினாயிரத்துடன் எவ்வாறு அனைத்து உடைமை இழப்புக்களையும் நிறைவேற்றிக் கொள்வது?

இந்நிலையில் இங்கு 20 குடும்பங்களுக்கு நிரந்தர வீடு, திருத்தவேலை என்பவற்றுக்கான அனுமதி கிடைத்துள்ள போதும் இவர்களின் காணிகளுக்கான உறுதிகள் இல்லாதமையாலும் பேமிற் காணிகள் உரியவரின் பெயரில் இல்லாதமையாலும் 02குடும்பங்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் பிரகாரம் அனுமதி வழங்க முடியுமென கிராமசேவகர் தெரிவித்துள்ளார்.

வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது போலவே மலசல கூடங்களும் தற்காலிகமாகவே வழங்கப் பட்டுள்ளன. அது கூட அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட வில்லை. இதனால் மக்கள் பற்றைக் காடுகளையும் ஆட்களற்ற வெற்றுக் காணிகளையும் நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் சுகாதாரப் பிரச்சனைகளும் நோய்கள், சூழல் மாசடைதல் என்பன ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. எனவே இதற்குரிய ஸ்தாபனங்கள்







இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தி அனைத்துக் குடும்பங்களுக்கும் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுப்பது அவசியமா-னதாகும்.

இங்குள்ள நீர் நிலைகள் நன்னீர் நிலைகளாகக் காணப்பட்ட போதும் குடிநீருக்கான பிரச்சனையும் இருந்துதான் வருகின்றது. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தமும் தொடர்ச்சியாக 21 வருடங்கள் பாவனையற்று இருந்தமையாலும் கிணறுகள் அனைத்தும் பாவிக்க முடியாதளவிற்குப் பாழடைந்த நிலையிலுள்ளன. இருந்தும் இக்கிணறுகள் அனைத்தையும் சேவாலங்கா நிறுவனம் திருத்தியமைத்து மீளவும்



அபிவிருத்தி செய்துள்ளபோதும் நோய்க்கிருமிகளின் தாக்கங் களினால் பல்வேறு நோய்கள் ஏற்படுமென மக்கள் அச்சமடைந்த நிலையிலே உள்ளனர். இந்நிலையில் காவல்துறையினர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீள் எழுச்சித்திட்டம்,சேவாலங்கா நிறுவனம் என்பவற்றினூடாக மொத்தம் 05 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அதனை மட்டுமே குடிநீருக்காக மக்கள் பயன்படுத்துகின்றனர்.

எனவே இப்பிரதேசங்களிலுள்ள கிணறுகள் அனைத்து சுகாதார முறைப்படி இறைத்து மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்க-ளின் அச்சநிலையை போக்குவதன் மூலம் குடிநீர்ப் பிரச்சனைக்கு ஓர் சிறந்த தீர்வைக் காணமுடியும்.

ஒரு கிராமத்தினுடைய தேவைகளானது மனிதனது அடிப்படைத் தேவைகளுடன் நின்றுவிடுவதில்லை. கல்வியின் வளர்ச்சியும் முக்கியமதனதாகும். கல்வி சகல பிள்ளைகளினதும் அடிப்படை உரிமையாகும். பாடசாலைக் கல்விக்குத் தேவையான அடிப்படை அறிவை வழங்கும் முன்பள்ளிக் கல்வியை வழங்குவதற்கு இங்கு ஒரு முன்பள்ளி கூட இல்லையென்பது மிகவும் வேதனைக்குரியதாகும். முன்பள்ளியை நடாத்துவதற்குத் தேவையான கட்டிடம் மற்றும் ஆசிரியர்கள் இல்லாமையே இதற்குக் காரணமாகும். கிராமங் களிலுள்ள் வாசிகசாலைகளில் தான் அனேகமான முன்



பள்ளிகள் நடாத்தப்படுகின்ற போதும் இங்கே அதற்குக் கூட வசதிகள் இல்லை. மூன்று பகுதிகளுக்கும் சேர்த்து ஒரு சனசமுக நிலையமே காணப்படுகின்றது. பாதுகாப்பற்ற நிலை உள்ளதால் இங்கு முன்பள்ளியை நடாத்துவதிலும் சிரமங்கள் உண்டு.போக்குக்காக பத்திரிகைப் பகுதி மட்டுமே இடம்பெறுகின்றது. இதனால் இங்குள்ள சிறுவர்கள் அனைவரும் வேறு இடங்களுக்குச் சென்று கற்கவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு சனசமுக நிலையம் உருவாக்கப்பட்டு ஒழுங்கான கட்டமைப்புடன் நிர்வா-கம் செயற்படுமாயின் கிராமத்தின் அபிவிருத்திகளில் நிச்சயம் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இங்கு வாழும் மக்களில் அனேகமானோர் கூலித் தொழி-லாளிகளாகவே உள்ளனர். பெரும்பான்மையான குடும்பங்கள் பெண்களின் வழிகாட்டலிலேயே இயங்கி வருகின்றது. அதாவது விதவைகளாகவும், கணவனால் கைவிடப் பட்டவர்களாகவுமே பெரும்பான்மையான குடும்பங்கள் உள்ளது. கூலி வேலைக்கான வாய்ப்பு இங்கில்லாததனால் ஆண்கள் வெளி இடங்களுக்குச் சென்று வேலை தேடவேண்டிய நிலை உள்ளது. ஆனால் பெண்களால் நிர்வகிக்கும் குடும்பத்தவர்கள் குழந்தைகள் காரணமாக தொலைதூரம் சென்று தொழில் செய்ய முடியாதுள்ளனர். இவ்வாறான பெண்களுக்கான சுயதொழில்வாய்ப்புகள் ஏற்படுத்திக்



கொடுப்பதும், அதற்கான ஊக்குவிப்புக்கள் வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அதன் மூலமா-கவே ஆண் துணையற்ற இக் குடும்பங்களும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய முடியும்.

இக்கிராமத்தினுடைய அடிப்படைத் தேவைகளும், சுகாதாரம், கல்வி, போன்ற அபிவிருத்திகளும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இக்கிராம மக்களின் வளர்ச்சிக்கு இப்பகுதி மக்களுடன் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களதும் உதவிகள் தேவைப்படுகின்றது. இந்த கிராமத்து மக்களது தேவை-களை உரியமுறையில் உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதன் மூலமே ஓர் வளர்ச்சியடைந்து வரும் கிராமமாக மாற்றமுடியும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

# பிரான்சில் ஜனாதிபதித் தேர்தல்




எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 22ஆம் திகதி (22-04-2012) பிரான்சில் ஜனாதிபதித் தேர்விற்கான முதலாவது சுற்று வாக்களிப்பு நடைபெற உள்ளது. பிரான்சில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் பிரான்சின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரமுகர்களிடமிருந்து குறைந்தபட்சம் 500 உத்தரவாதக் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும் என்பது விதிமுறையாக உள்ளது. ஒரு பிரமுகர் ஒரு வேட்பாளருக்கு மட்டுமே கையொப்பம் இடலாம்.




தற்போதைய ஜனதிபதியான மக்கள் ஐக்கிய முன்னணியின் நிக்கோலா சார்க்கோசி அவர்களும், சோசலிசக்கட்சியின் வேட்பாளராக பிரான்சுவா கொலண்ட் உட்பட தீவிர வலது சாரிக்கட்சியின் வேட்பாளராக மறின் லூபென் அவர்களுமே பிரதான வேட்பாளராக உள்ளனர்.” சூழ்ந்துள்ள நிதி நெரிக்கடியானது உலக அழிவை குறிப்பதாகவும் அந்த உலகமே மருணிக்க முடியாதும் உள்ளது, ஒரு புதிய உலகம் பிறப்பதற்கும் இயலாது இருக்கின்றது. பாதுகாப்பான சக்திமிக்க நாடாக பிரான்சை உருவாக்குவதுதான் எனது நோக்கம். அதற்கு 5 வருடம் என்பது போதிய அவகசமாக இருக்கவில்லை. “ என்பதாக தற்போதைய ஜனாதிபதியான நிக்கோலா சார்க்கோசியின் வாதம் இருக்கின்றது. “தற்போதைய ஜனாதிபதி 70 மில்லின் யூரோக்களை முதலாளிகளுக்கு இனாமாக கொடுத்துள்ளார். (வரிச்சலுகை,வரிநீக்கம்,தொழிற்சாலைகளுக்கு மானியம்) அணுமின் நிலையங்கள் மூடப்பட வேண்டும், வெளிநாட்டுக்காரர்களுக்கு வசிப்பிட உரிமையும், வாக்குரிமையும் அளிக்கப்படும், நான் எப்போதும் சோசலிஸ்ட் ஆகவும் இடதுசாரியாகவும் இருப்பேன்” என்பதாக சோசலிசக் கட்சியின் வேட்பாளரான பிரான்சுவா கோலண்ட் அவர்களின் பிரச்சாரமாகவும் உள்ளது.

போட்டியிட விரும்பி பதிவு செய்துள்ள வேட்பாளர்களில் இந்த நான்கு பேருமே பிரதான வேட்பாளர்களாகும். வேட்பு மனு தாக்கல் செய்தவர்கள் 500 கையொப்பம் (மேலுள்ள தவலின்படி) பெறமுடியாத பட்சத்தில் அவர்கள் தேர்தலி போட்டியிட முடியாது.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் தலைதூக்கியுள்ள சாதிவெறி

29 பெப்ரவரி 2012, அன்று 'தேனி' இணையத்தில் வெளிவந்த செய்தி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்துக்கு உட்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேசசபை (சுன்னாகம்) வெற்றிட மாகவுள்ள வாகன சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இந்த நிலையில், இப்பதவிக்காக அங்கு நீண்ட காலமாக சிற்றூழியராகக் கடமை புரியும் ஊழியர் ஒருவர் விண்ணபித்திருந்தார், அவரின் சாதியினைக் காரணம் காட்டிய வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் தியாகராசா பிரகாஷ்,அவ் விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளதாக அறிய முடிகின்றது.

சாதியினைக் காரணம் காட்டி விண்ணப்பத்தினை பிரதேசசபைத் தலைவர் நிராகரித்ததனைத் தொடர்ந்து அங்கு கடமை புரியும் சிற்றூழியர்கள் ஆர்ப்பாட்டத்துடன் கூடிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த சனிக்கிழமை உழவு எந்திர சாரதியினால் வேலை மேற்பார்வையாளர் தாக்கப்பட்டதைக் காரணம் காட்டி ஊழியர்கள் பிரதேச செயலாளருக்கு கொடுத்த மனுவைத் தொடர்ந்து ஒழுக்காற்று விசாரணைக்காக இடைநிறுத்தப்பட்ட சாரதிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

*இச்சம்பவம் குறித்து தமிழ் ஈழ ஆதரவும் மேட்டுக்குடி மனநிலையும் கொண்ட இணையம் (தமிழ்வின்) கீழ்வரும் செய்தியை வெளியிட்டுள்ளது.*

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையை பெரிதாக்கும் இராணுவத்தினர்!

வலி.மேற்கு பிரதேச சபையில் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினை, சாதிப் பிரச்சினையாக உருமாற்றம் பெற்றிருக்கின்ற நிலையில் இந்த விடயத்தில் படையினர் தலையிட்டு மேலும் ஊதிப் பெருப்பிப்பதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அண்மையில், அராலியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கும், இன்னொரு உறுப்பினருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் அந்த உறுப்பினர் அராலி-யைச் சேர்ந்த உறுப்பினரை சாதிப் பெயரைச் சொல்லி இழிவாகப் பேசியுள்ளார்.

இந்த விடயம் தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, தவிசாளர் இந்த விடயத்திற்குத் தீர்வு காண முற்பட்டிருந்தார். எனினும், அது சாத்தியமற்றுப் போய்விட்டது. இந்நிலையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தலையிட்டிருந்தார். மேலும், இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு 13நாட்கள் கால அவகாசமும் அவர் கேட்டிருந்தார். எனினும் ,இதற்குள் குறித்த உறுப்பினர் தனது ஆதரவாளர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டமொன்றை நடத்திவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த பிரதேச சபை நிர்வாகம், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலரை பணியிலிருந்து நீக்கிவிட்டனர். இதனால் மீண்டும் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதனையடுத்து அராலியைச் சேர்ந்த உறுப்பினர் இராணுவத்தினரின் உதவியுடன், துண்டுப் பிரசுரங்களை குடாநாடு முழுவதும் ஒட்டிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த துண்டுப்பிரசுரத்தில் மக்கள் முன்னணி என கீழ் அடையாளமும் போடப்பட்டிருக்கின்றது.





# கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையமும், கிராம மக்களும்

150 வருடங்களுக்கு மேலாக இலங்கையை ஆட்சி செய்த வெள்ளையர்கள் 1948ம் ஆண்டு இலங்கைக்கான அரசியல் சுதந்திரத்தை சிங்கள மேட்டுக்குடியினர் கைகளிலும், தமிழ் மேட்டுக்குடியினர் கைகளிலுமே ஒப்படைத்து தமது ஆதிக்கத்தை இலங்கையிலே மேலும் தொடர்ந்தனர். இலங்கையின் அரசியல் வரலாற்றிலே கிராமப்புற உழைக்கும் மக்களுக்கும், ஏனைய உழைக்கும் மக்களுக்கும் அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கும் வாய்ப்புக்கள் எப்பவுமே கிடைக்கவில்லை. அன்று தொட்டு அரச அபிவிருத்திப் பணிகள், உத்தியோக வாய்ப்புக்கள் எவையுமே கிராமங்களை பெரும்பாலும் சென்றடையவில்லை. பல கிராமங்கள் இன்றும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகள், குடியிருப்புக்கு மத்தியிலே சுடுகாடு, மின்சார வசதியின்மை, மலசலகூடப் பிரச்சனை, நிலப்பிரச்சனை, கல்வியறிவு மறுக்கப்பட்டமை, கலாச்சாரச் சீரழிவுகள் என கவனிப்பாரற்ற நிலையிலும் பின்தங்கிய நிலையிலுமே பெரும்பாலான கிராமங்கள் காணப்படுகின்றன. விஞ்ஞானமும், நாகரீகமும், பொருளாதார சூழ்நிலைகளும் மாறி-வரும் நவீன உலகில் கூட உழைக்கும் மக்களினதும் வாழ்வியல் சூழல் மிகவும் கவலைக்குரியதாகவே உள்ளது. இவ்வாறு பின்தங்கிய நிலையிலுள்ள மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தி, அவர்களது கிராமங்களை அபிவிருத்தி செய்து, அவர்களது பிள்ளைகளின் கல்வியறிவை மேம்படச்செய்து, அவர்களது வாழ்வியல் சூழலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம் தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. சமூக பொருளாதார நிலமைகளை கிராமங்கள் தோறும் ஆய்வு செய்வதன் மூலமே இக் கிராமங்களின் உண்மையான பிரச்சனைகளை அறிவுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டமுடியும். இதற்கான முதற்கட்ட பணிகளில் ஒன்றாக கிராமங்கள் தோறும் உழைக்கும் மக்கள் மத்தியிலே ஓர் ஆழமான ஆய்வுப் பணியை கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு ஆய்வு செய்யப்படுகின்ற கிராம மக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், பிரச்சனைகளின் அடிப்படைகள் இனங்காணப்பட்டு வருகின்றது. ஜனநாயக உரிமை-களை பேணுவதோடு, கிராமங்களின் கல்வி, கலாச்சார பணிகளை மேம்படுத்தி எங்கள் சந்ததியின் எதிர்காலத்தைச் சிறப்பிக்க ஒன்றுபடுவோம் என்ற குறிக்கோளினை ஏற்றுக்கொண்ட கிராம மக்கள் அனைவரும் தமது கிராமத்திற்கு இவவாறான் அமைப்பு அவசியம் எனவும் இதற்கு மக்கள் அனைவரும் பூரண ஒத்துளைப்பு வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளனர். அமைப்பின் ஆய்வுகளுக்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு கிடைப்பதனால் இவர்க-ளின் கிராமங்களிற்கான அபிவிருத்திகள் மிகவும் விரைவாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கடன்பெற முயன்ற ஐவர் வங்கி முகாமையாளரால் தடுத்து வைத்து மிரட்டப்பட்டனர்.

மேற்படி சம்பவம் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையிலேயே இடம்பெற்றுள்ளது. யுத்தத்தினால் உடைமைகள் அனைத்தையும் இழந்த இவர்கள் தங்கள் வாழ்வை மேம்படுத்துவதற்காக கூட்டாகச் சேர்ந்து கிளிநொச்சி நகரிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். விவசாயக் கடன் என்பதால் விவசாய சம்மேளனத் தலைவரும் இவர்களுக்கு கடன் வழங்கலாமென சிபார்சு செய்துள்ளார்.

விண்ணபித்த சில நாட்களுக்கு பிற்பாடு தமது கடன் விண்ணபத்தின் நிலையை அறிந்து கொள்வதற்காக வங்கிக்கு சென்று விசாரித்துள்ளனர். அங்கு சென்ற இவர்களை குறிப்பிட்ட வங்கி முகாமையாளர் கடுமையான விசாரணைக்குட்படுத்தியதோடு அவர்-களை வெளியில் செல்லவிடாது வங்கியில் தடுத்து வைத்து மிரட்டியுள்ளார்.

வங்கியில் தமது கணவன்மார்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அறிந்த ஐவரின் மனைவிகள் செய்வதறியாது குழப்பமடைந்தனர்.

பல்வேறு முயற்சிகளுக்கு பிற்பாடு கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மைய தலைவரின் உதவியுடன் வங்கிக்கு சென்று விசாரித்துள்ளனர். கடனுக்கு விண்ணப்பித்துள்ள ஐவரும் அப்பிரதேசத்திலுள்ள கொமெர்ஸல் வங்கியில் ஏற்கனவே கடன் பெற்றுள்ளனர் என்றும், இவர்கள் மீண்டும் இலங்கை வங்கியிலும் கடனுக்கு விண்ணப்பித்துள்ளதானது மிகப்பெரிய மோசடி வேலை எனவேதான் நாம் அவர்-களை தடுத்துவைத்துள்ளோம் என முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் வங்கி முகாமையாளரால் தடுத்துவைத்து மிரட்டப்பட்டுள்ளனர்.

மிகப்பெரிய வர்த்தக ‘முதலைகளும்’ உயர் சாதிப்பிரமுகர்களும் வங்கி முகாமையாளர்களை தாஜா பண்ணி ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கடன் பெறுவது இயல்பாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் வறுமைப்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமே இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படுகிறது. தனது வங்கியில் கடன் கொடுக்க முடியா-தென மறுப்பதற்கு அந்த வங்கி முகாமையாளருக்கு உரிமை இருப்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்களை தடுத்துவைத்து மிரட்டுவதற்கான உரிமையை அந்த முகாமையாளருக்கு யார் கொடுத்தது என்பது தான் எமது கேள்வியாக உள்ளது. ■

# உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டு

உ ரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையம் 9-02-2012 அன்று தனது 41வது ஆண்டு நிறைவை கொண்டாடியது. அதன் நினைவாக தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் விளையட்டுப் போட்டிகளும், மூன்றாவது நாள் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல பிரமுகர்களும், சமூக அக்றையுடையவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள் கயிறு இழுத்தல், கிறீஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற கலைநிகழ்ச்சியில் புதுவை செல்வம் அவர்களின் ‘மனங்கள் மாறவேண்டும்’ என்னும் நாடகம் பலரின் பாராட்டைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

**உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 41வது ஆண்டு நிறைவையொட்டி நிகழ்ந்த காட்சிகள்**











# மனநிலை பாதிக்கப்பட்ட ஆசிரியரால் கல்வி கற்பிக்கப்படும் நிலை!

கல்வி என்பது ஒரு நாட்டில் வாழும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் உரிய சம உரிமை. மாணவர்களுக்கிடையில் எந்தவகையான ஏற்றத்தாழ்வுகள், வேறுபாடுகள் ஏற்பட்டுவிடாது அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரேமாதிரியான கல்வி கிடைக்கவேண்டும். அனைவரும் கல்வியை பெற வேண்டும் என்பதற்காகவே இலங்கை அரசு பொதுவான கல்வி, பாடநூல்கள், சீருடை, சத்துணவு என்பவற்றை இலவசமாகவே வழங்கி வருகின்றது. இருந்தபோதும் பாடசாலைகளின் தேவை-களை பூர்த்தி செய்வதில் யாழ் மாவட்ட கல்வி 'அதிகாரம்' மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, சாதிரீ-தியான பாகுபாடுகளே மேலோங்கி வருகின்றது. இவற்றை உறுதிப்படுத்தும் பல சம்பவங்கள் தொடர்ந்து வருவதையும் காணக்கூடியதாகவே இருகின்றது.

கிராமப்புறத்துப் பாடசாலைகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளில் அதி-கமாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. சில பாட-சாலைகளில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டாலும் அங்கு கல்வி கற்பிப்பதற்காக அமர்த்தப்படும் ஆசிரியர்களின் தரம் பற்றி எவ்வித அக்கறையும் அற்ற நியமனங்களும் நடைபெற்றுவருகின்றது.

ஒரு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிப் பயிற்சிகளினூடாக கல்வி பயின்றவராகவோ, அல்லது ஒரு பட்டதாரியாகவோ மட்டும் இருந்தால் போதுமா? ஒரு ஆசிரியருக்குள்ள நோய்கள் அவர் மாணவர்களுடன் அணுகும் விதம், ஒழுக்கம் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக ஒரு ஆசிரியருடைய மனநிலை எவ்வாறுள்ளதென்பது கட்டாயம் பரிசீலிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் விடயங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்வை சிறந்த முறையில் அமைத்துக்கொள்வதற்கு ஏற்றதாக அமையவேண்டுமே தவிர அவர்களை பிழையான வழிகளில் சிதறச் செய்வதாக அமையக்கூடாது.

மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு ஆசிரியரால் மாணவர்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் கல்விகற்பிக்க முடியும்?

அனைத்துப் பாடங்களும் அவசியாமனபோதும் ஆங்கிலக்கல்வி உலகளாவிய ரீதியில் பொது மொழியா-கப் பேசப்படுவதால் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டு அனைத்துப் பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக போதிக்கப்படுவதன் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. இருந்தபோதும் அதற்கான ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இந்த நிலையில் தலித் மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கும் உடுவில் அமெரிக்க மிசென் கல்லூ ரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியை வீதிகளில் தனியாக செல்லும் போது கூட தனக்குத் தானே கதைத்துச் செல்வதை அவதானித்ததாக பெற்றோர் சிலர் தெரிவித்துள்ளதுடன் குறிப்பிட்ட ஆசிரியையால் எவ்வாறு கல்வி கற்பிக்க முடியும் எனவும் கேள்வி எழுப்புகின்றனர். இவ்வாறான ஆசிரியர்களால் எமது பிள்ளைகளின் கல்வி நிலை எவ்வாறு வளர்ச்சியடையும் எனறும் அச்சமடைந்துள்ளார்கள். பாடசாலையில் வேறு ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பாடசாலை நிர்வாகத்தாலும் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள் முடியவில்லை.

தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே கல்வி கற்கும் பாடசாலை என்பதால் இந்த அலட்சியப்போக்கு நிகழ்ந்ததா? அல்லது குறிப்பிட்ட ஆசிரியை என்பவர் ஒரு உயர்சாதியினர் என்பதால் அவரை பாதுகாக்கும் நோக்கத்தில் நிகழ்ந்ததா? இது குறித்து யாழ் மாவட்ட கல்வி அதிகாரமானது எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது மௌனிக-ளாக இருந்து வருவதற்கான காரணம் என்ன?

எனவே யாழ் மாவட்ட கல்வி அதிகார நிர்வா-கமானது இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் அதன் ஊடாகவே இம்மாணவர்களுக்கும் அச்சமுகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு சுபீட்சமான எதிர்-காலம் கிடைக்கும்.


**'காண்பதிலுள்ள காணாததைக் காண்போம்'**

**இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் இணையம்**

**"www.thuuu.net"**

"இந்த மண்ணின் பரம்பரைப் புத்தி இங்கு மட்டுமல்ல,கடல் கடந்து தேசம் கடந்து போய் வேரோடியுள்ள புலம் பெயர்ந்தவர்களிடையே கூடத் தனது நச்சு வேர்களைப் பரப்பி வருகின்றது என்பதுதான் இன்றைய சர்வதேசச் சோகம்! சர்வதேசக் கொடுமை! சர்வதேச அக்கிரமம்!”
-டொமினிக் ஜீவா-

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற தோட்டை அடகு வைத்த தாய்

யாழ் மாவட்ட பிரதேசசெயலகங்களில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களின் வினியோகம் கணனிமயமாக்கப்பட்டதோடு மாவட்டத்தின் அனைத்துப் பதிவாளர் பிரிவுகளுக்குமான சான்றிதழ்களையும் ஒரே பிரதேசசெயலகத்திலேயே பெற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை தமக்கு அண்மையிலுள்ள பிரதேசசெயலகங்களில் பெற்றுக்கொள்ள பொதுமக்களுக்கு வாய்ப்பு இருந்தது.

தற்போது சில பிரதேசசெயலகங்களில் கணனிப் பிர-திபெறும் இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதாலும் ஏனைய பிரதேசசெயலகங்களில் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவதாலும் குறித்த சேவையை பெற்றுக் கொள்வது சிரமமாக உள்ளது. இதனால் யாழ் போதனாவைத்தியசாலையில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு யாழ் பிரதேசசெயலகத்துக்கே வரவேண்டியுள்ளது.

இப்படி வருபவர்களிடம் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் நிற்கும் தரகர்கள் ஏமாற்றி பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். சமூகத்தில் பின்னிலையில் உள்ள மக்களே இதனால் அதிகம் பாதிப்படைகிறார்கள்.
அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வந்த ஏழைத் தாய் ஒருவரிடம் பிறப்புசான்றிதழ் எடுத்துத் தருவதற்கு தரகர் ஒருவர் அதிக பணம் கோரியுள்ளார். கையில் போதிய பணம் இல்லாததால் குறித்த அபலைப் பெண் தனது காதுத் தோட்டை அடகு வைத்து அவருக்குப் பணம் செலுத்தியுள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்டு மாலை 3 மணிக்கு வரும்படி கூறி மாலையில் வந்து பார்த்தபோது குறித்த நபர் தலைமறைவாகியுள்ளார். இதனால் ஏமாற்றமடைந்த பெண் மாவட்டசெயலகத்தில் உள்ள காணிமாவட்டப் பதிவாளரிடம் இது பற்றி முறையிட்டுள்ளார்.

தற்போது யாழ் பிரதேசசெயலகத்தில் 24 மணி நேரத்திற்குள் பிறப்புபதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதும் மக்கள் நேரடியாக அலுவலகத்துடன் தொடர்புகொள்ளாது அறியாமையினால் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் சிக்கி அதிக பணத்தைச் செலவழித்து ஏமாந்து போவதாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.இவ்வாறாக பலசந்தர்ப்பங்களில் ஏழை மக்கள் ஏமாற்றப்படுவது தற்போது அதிகரித்து வருகின்றது. இதிலிருந்து தடுப்பதற்காக மக்களுக்கான ஆலோசனைமையம் இருக்கின்றது. மக்கள் தங்களுக்கான ஆலோசனைகளை கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள மக்களுக்கான ஆலோசனை மையத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிட்ட மையம் அறிவித்துள்ளது. அதனது விலாசம்: Cambridge management college, 23 kacheri nallur road, jaffna

# சித்தன் கதைக்கிறேன்...



தமிழ் சமூகம் நாங்கள், ஒற்றுமையா இருக்கவேணும், ஒன்றுபட வேணும் எண்டு சொல்லி இண்டைக்கு நேற்று இல்லை பல வருசக்கணக்காக கூக்குரல் போட்டுக்கொண்டுதான் இருக்கினம். சேர்.பொன்.இராமநாதன், ஆருணாச்சலம், தொடங்கி ஜீ.ஜீ. பொன்னம்பலம், செல்வநாயகம், பிறகு அமிர்தலிங்கம், பிரபாகரன் வரை எல்லோரும் கேட்ட விசயம் தான். ஆனால் இதுவரை எங்கட தமிழர்கள் ஒரு குடையுக்குக் கீழ வந்திருக்கினமோ எண்டால் இல்லையெண்டுதான் சொல்ல வேணும். அதுக்கு முக்கியமான காரணங்கள் கனக்க இருக்கு. சாதி, மதம்,பிராந்தியம்,பால், வர்க்கம் இப்படியெண்டு பலதும் பத்துமாக எங்களுக்க பிரிவுகள்,பிளவுகள் இருந்தாலும் இதில சாதியப்பிளவுதான் சிக்கலும் புடுங்கலுமாக முதலாம் இடத்தில இருக்குதெண்டு நான் அடிச்சுச் சொல்லுவன்.

இந்தச் சாதியை ஒழிக்க வேணுமெண்டு சொல்லி யாரும் முழுமையா செயல்பட்டிருக்கினமோ…! இல்லை. அப்படி யாரும் அந்த வேலையில மினக்கடேல்ல. அதுக்கான காரணத்தை நாங்கள் சரியாக புரிஞ்சு கொள்ள வேணும். எங்கட தமிழ் தலைவர்களா இருந்தவ தங்கட தேவைக்கேற்ற நேரத்தில சாதி அழியவேணும் எண்டு சொல்லி வாய்ப்பேச்சோடயும்,அறிக்கைகள் விடுவதோடயும் சரி. இன்னுஞ் சரியாச் சொல்லப்போனா பல தலைவர்கள் சாதிய வளக்கிறதில தான் கண்ணுங்கருத்துமாக இருந்திருக்கினம்.

இவயிட்ட சாதிய ஒழிக்க வேணும் எண்ட எந்த வேலைத்திடமும் இருக்கவில்லை. 1980க்கு முன்னம் இடது சாரிக் கட்சிகளில் இருந்து செயல்பட்ட சில இடதுசாரித் தலைவர்கள் தீண்டாமைக்கு எதிராக போராட்டம் நடத்தினவ எண்டது உண்மைதான்...ஆனாலும் சாதியின்ர வேரைக் கண்டுபிடிக்க அவையலாலும் ஏலாமல்தான் போச்சு. ஏனெண்டா பாருங்கோ எங்களுக்கிடையில புளங்கிற சாதியத்தை உருவாக்கினதும், பாதுகாக்கிறதும் இந்துமதம் இல்லையோ? தொடர்ந்தும் இந்த சாதியத்தை கட்டிக்காக்கிறதும் எங்கட இந்துக் கலாச்சாரம்தான். இந்த விசயத்தை கண்டுகொள்ளாமல் எங்கட பல இடது சாரித் தலைவர்கள் இந்துக்களாக இருந்து கொண்டும், குடும்பரீதியாக இந்துக் கலாச்சார பழக்க வழக்கங்கள விட்டு வெளிய வரமுடியாததாலையும் அவர்களால சாதியத்தின்ர வேரை கண்டுகொள்ள முடியாமல் போச்சு.இண்டைக்கும் தமிழ் தேசியம் பேசுறவயள் தமிழனுக்கு அதிகாரம் வந்த பிறகுதான் சாதியப்பிரச்சனையை தீர்க்க முடியும் எண்டு சொல்லிக் கொண்டு இருக்கினம். அதோட இந்த கொமினிசம் பேசுறவ கூட அப்படித்தான் சொல்லுகினம். இப்ப நாங்கள் சாதிப்பிரச்சனையைப் பற்றி கதைச்சால் அது சிங்கள அரசுக்கு சாதகமாப் போயிடுமாம். அப்படியெண்டால் இன்னும் நூறு வருசத்துக்குப் பிறகுதான் தமிழனுக்கு அதிகாரம் கிடைக்க காலமெடுக்கு மெண்டால் சாதிரீதியாக நடக்கிற கொடுமைகளைப் பற்றி எதுவும் பேசாமல் பறையாமல் இருக்கவேணுமே? சாதியம் எண்டுற புற்றுநோய் தொடர்ந்து தமிழினத்தை அரித்து கொண்டிருப்பதை வேடிக்கை பாத்துக் கொண்டே இருக்கிறது?

இண்டைக்கு சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சனையான காணி,வீடு,தொழில் பிரச்சனைகள் மிகக் கவலைக்குரியதாக இருக்குது. இது ஒரு முக்கியமான பிரச்சனையெண்டு தெரியேல்லையோ? வேலை வாய்ப்புகளிலும், பதிவி உயர்வுகளிலும் சாதியப் பாகுபாடுகள் பாக்கபடுறது வெட்ட வெளிச்சமாகத் தெரியுது? இவைகளைப்பற்றி எல்லாம் யார் கதைக்குறது, யாருட்டைப்போய் முறையிடுறது?
1980க்கு முன்னர் மாதிரி சிறுபான்மைத் தமிழர் மகாசபை,தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் போல வீரியமான அமைப்புகள் இருக்குமானால் சாதிரீதியாக கிளம்புகிற பல பிரச்சனைகளையும், புறக்கணிப்புகளையும் எதிர்த்துப் போராட முடியும்.

இதையெல்லாம் இன்றைய படித்த இளைஞர்கள் கவனத்தில எடுக்கவேணும். நாமும் நமது குடும்பமும் எண்டு இருக்காமல்,நமக்கேன் வீண் சிரமம் எண்டிருக்காமல் எங்கட சமூக மேம்பாடு கருதி இவைகளை கவனத்தில் எடுக்கவேணும். ஒருளவு இண்டைக்கு இருக்கிற ஜனநாயகச் சூழலை கணக்கிலெடுத்து சமூக கடமையை செய்ய முன் வரவேணும். ஓரளவிற்கு முன்னேறிவந்த சமூகம் யுத்தத்திற்கு பிறகு தொடர்ந்தும் சீரழிஞ்சு போற நிலையை பார்த்துக் கொண்டு கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே சிறுபான்மைத் தமிழர் மகாசபையை மேலம் பலப்படுத்தி எங்கட கண்ணுக்கு முன்னால நடக்கிற சாதியக் கொடுமைகளை அகற்றுவதற்கான பணிகளை செய்ய அனைவரும் முன்வரவேணும்.

-சித்தன்-